# ஊர் கலைஞ்சு போச்சு புதினம் காட்டும் மனித மாண்புகள்

முனைவர் த. புஷ்பராணி
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச்சுருக்கம்

ஊர் கலைஞ்சு போச்சு புதினத்தில் இடம்பெற்றுள்ள பிச்சாண்டக்கவுண்டர் என்ற பாத்திரப்படைப்பு வழி நடுவுநிலைமை, கருணை, இரக்கம் ஆகிய மனித மாண்புகள் குறித்து ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## குறிச்சொற்கள்

1. வெள்ளச்சோளம் - மனதில் தோன்றியதை மறைக்காமல் கூறும் இயல்புடைய மனிதர்
2. வறட்டு கௌரவம் - ஆணவத்துடன் செயல்படுதல்.
3. கவுண்டர் - கொங்கு நாட்டுப் பகுதியில வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழும் மக்கள் 4. செமை – சுமை. 5. பூடு – பயிரிடாத களையாய் வரும் சிறு செடிகள். 6. தட்டை – வெள்ளைச் சோளப் பயிரைக் குறிக்கும் சொல். 7. அப்பாரு – தந்தையின் தந்தையைக் குறிக்கும் உறவு முறைச்சொல்.

## முன்னுரை

மனித மாண்பு என்பது மனித குலத்திற்கே உரிய பெருமை எனலாம். மனித மாண்பானது மனிதப் பண்புகளில் மிக முக்கியமான ஒன்றாகும். உலகம் அமைதியாகவும் உயர்வை நோக்கியும் இயங்கவேண்டுமெனில் மனிதமாண்பு இன்றியமையாதது. சங்க இலக்கியங்களில் தொடங்கி அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், முதலாகத் தற்கால இலக்கியங்கள் வரை அனைத்தும் நமக்கு மனித மாண்புப் பண்புகளையே வலியுறுத்துகின்றன. தற்காலத்தில் புதினம், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை போன்ற பலவற்றின் வாயிலாகவும் படைப்பாளர்கள் மனித மாண்புகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி வருகின்றனர். அவ்வகையில், கொங்கு மண்ணின் வழக்காறுகளை, வாழ்வியல் நெறிகளைப் பதிவுசெய்யும் “ஊர் கலைஞ்சு போச்சு” என்ற புதினத்திலும் புதின ஆசிரியர் மா. நடராசன் மனித மாண்புகளைத் திறம்படப் பதிவு செய்துள்ளார். இப்புதினத்தில் இடம்பெற்றுள்ள முதன்மைக் கதாப்பாத்திரமான “பிச்சாண்டக் கவுண்டர்” வழி மனித மாண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## மாண்பு – சொல்விளக்கம்

“மாண்” என்பதற்கு மாட்சிமை, பெருமை, மாட்சிமைப்படுதல், நிறைவாகுதல், நன்றாகுதல், To become glorious and grew it, greatness, excellence என்பனவாக அகராதி பொருள்விளக்கம் தருகின்றது. (The Lifco Tamil Tamil English dictionary P. N. 546)

‘மாண்பு’ என்ற சொல் உயர்வு, சிறப்பு, பெருமை, அழகு, அன்பு, கருணை, பகிர்வு, மன்னிப்பு எனப் பலவாகப் பொருள் உணர்த்தி நிற்கின்றது.

**“மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”** *(1)*
**(திருக்குறள். 51)**

என்ற குறட்பாவில் “மாண்புடையள் ஆகி” என்பதற்குப் பரிமேலழகர், “தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாய்” எனக்கூறி அதில், ‘நற்குணங்களாவன’ என்பதற்கு “துறந்தார்ப் பேணலும் விருந்து அயர்தலும் வறியார்மாட்டு அருளுடைமையும் முதலாயின” எனவும் ‘நற்செய்கைகளாவன’ என்பதற்கு



Scanned with OKEN Scanner

"வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டில் தொழில் வன்மையும் ஒப்புரவு செய்தலும் முதலாயின" என விளக்கம் கூறியுள்ளார். (ப. 31) இத்துடன்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (திருக்குறள். 131)

என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகர் "ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலான் அவ் ஒழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்" (ப. 45) என்கிறார். ஒழுக்கம் என்பது 'விழுப்பம்' என்ற மாண்பை நோக்கி இட்டுச் செல்லும் என்பது இவண் நோக்கத்தக்கது.

### பிச்சாண்டக்கவுண்டர் அறிமுகம்

'ஊர் கலைஞ்சு போச்சு' புதினத்தில் இடம்பெற்றுள்ள பிச்சாண்டக் கவுண்டர் என்ற கதைமாந்தர் மாண்புக்குரிய பல குணங்களின் ஒட்டுமொத்த வடிவமாக விளங்குகிறார்.

"சக மனிதனுக்கும் தன்னைச் சார்ந்த மனிதனுக்கும் ஆதரவற்ற ஏழைகளுக்கும் பண்ணாடிகளின் பண்ணாட்டுத் தனத்தாலும் மேட்டுமைதாரர்களின் மேனா மினுக்குத் தனத்தாலும் பாதகம் ஏற்படும்பொழுதெல்லாம் தன்னை இழந்தேனும் தன்னை மறைத்தேனும் முதலில் தன்னிடம் வந்து யார் சொல்கிறார்களோ, அவர்களுக்காக எகிறிக் குதித்துப் போராட்டம் செய்வது கொங்குக் கிராமத்தானின் அடையாளம். எதையும் நம்பிக்கொள்ளும் யதார்த்தம்; எவ்விதச் சல்லடையோ, மடையோ போடாமல் அனுபவித்ததைப் பட்டதைச் சொல்லும் 'வெள்ளைச் சோளம்' கொங்குமண்ணின் விளைச்சல். சகமனிதர்களையும் தன்னால் வளர்க்கப்படும் மாடுகன்றுகளையும் நாய் பூனைகளையும் நேசிப்பதைப் போலவே மண்ணை நேசிப்பதும், கொங்கு மனிதர்களின் இதயம் ஏமாற்றப்பட்டால், ஏமாற்றப்படுவது தெரியாமல் இருக்கும் வரை ஏமாந்து கொண்டே இருப்பதும் அந்த ஏமாற்றம் தெரிந்தால் அதே இடத்தில் அது நீதிமன்றமாகவோ காவல் நிலையமாகவோ இருந்தாலும் கூடக் கொலையே செய்யத் துணிவதும் போர்க்குண அம்சம் அல்லவா?

இத்தனையும் ஒருருவாய் வாழ்ந்தவர் தான் பிச்சாண்டக்கவுண்டர். இருபதாம் நூற்றாண்டின் தமிழகக் கொங்குச் சமுதாயத்தின் அடையாளம்" (ஊர் கலைஞ்சு போச்சு புதின முன்னுரையில்) என்று புதின ஆசிரியர் கொங்கு கிராமத்து மனிதரின் பண்புகளை எடுத்துச் சொல்லி, அத்தகைய மனிதர்கள் வாழும் சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாகப் பிச்சாண்டக்கவுண்டரை இப்புதினத்தில் முன் நிறுத்தியமையைக் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

### உயர்ந்த உள்ளம்

பாரபட்சமில்லாதவராகவும் உயர்ந்த உள்ளம் கொண்டவராகவும் பிச்சாண்டக்கவுண்டர் விளங்குகிறார். "பிச்சாண்டக்கவுண்டரை எல்லோரும் மின்கோபின்னு சொல்லுவாங்க. ஆனா கோபம் இருக்கிற பக்கம்தான் குணம் இருக்குங்கிற மாதிரி தொண்டையிலே போறதைத் தோண்டிக் குடுத்திடுவான்னும் சொல்லுவாங்க. எல்லாத்தையும் ஒரே மாதிரிதான் அணுகுவார். 'வெள்ளைச் சோளம்னா, வெள்ளச்சோளம் பிச்சீனந்தான். வெளுத்ததெல்லாம் பாலு, கருத்ததெல்லாம் தண்ணீன்னு நம்புவான்' என்று சிலபேர் சிலாகித்துப் பேசிக் கொள்வார்கள்" (அத். 2, ப. 09) என்ற வரிகள் பிச்சாண்டக்கவுண்டர் முன்கோபியாக இருந்தாலும் நல்ல குணம் படைத்தவராக விளங்கி, தன்னிடம் உதவிவேண்டி வருகின்றவர்களுக்குத் தன்னலம் விட்டு உதவுகின்ற மனிதராகவும், சூது, வஞ்சகம் போன்ற தீய எண்ணங்களற்ற மனிதராகவும் விளங்கி மாண்பபை மனிதராகத் தன்னைக் காட்டுகிறார்.

### நடுவுநிலைமை

தன்னுடைய சாதி, தன்னுடைய உறவு என்றெல்லாம் பார்க்காமல் யார் பக்கம் நீதியுண்டோ அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற மனிதராக விளங்கி,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"
(திருக்குறள். 118)



Scanned with OKEN Scanner

என்ற குறளுக்கு இலக்கணமாக அமைகின்றார். மந்திரிபாளையத்தில் இவரைச் சார்ந்த கொங்கு வேளாளக்கவுண்டர் சாதியினருக்கும் மாதாரியர் சாதியினருக்கும் இடையே ஒரு பிரச்சினை எழுந்தபொழுது மாதாரியார் சமூகத்தினரிடம் நீதியிருப்பதை அறிந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற தன்மை இவரின் நடுவுநிலைத் தன்மைக்குச் சான்றாகின்றது. அதாவது, ஊர்க்கோயில் திருவிழாவில் மாவிளக்குப் பூசைச் சடங்கில், தலைமைப் பொறுப்பில் உள்ள கொங்கு வெள்ளாளக்கவுண்டர் சாதியைச்சார்ந்த சிலர் வறட்டுகௌரவம் பார்த்துத் தனது கௌரவத்தை நிலைநாட்டும் ஆணவத்துடன், வழக்கமான நடைமுறையில் இருந்து மாறுபட்டு நடக்க முயன்றபோது அதனைப் பிச்சாண்டக்கவுண்டர் ஏற்றுக்கொள்ளாமல், “நீங்க போங்கடா, கோயிலுக்குனு வந்தா எல்லா ஒன்றுதான். ஆருமொதல்ல ஏர்றாங்களோ அவிகளுக்குத் தான் மொதல் மிராஸ். இருந்தா அவிய அவிய ஊட்டிலே வெச்சுக்க வேண்டியதுதான்” (அத். 13, ப. 114) என்று கூறி தனது ஊர் மரபு வழியான முறையை நிலைநாட்டுகிறார்.

அநீதிகளைக் கண்டால் கொதித்து எழும் போராட்ட உணர்வு கொண்டவர் பிச்சாண்டக்கவுண்டர். ஊர்த்திருவிழாவில் நடந்த பிரச்சினைக்காக, ஆதிக்கம் கொண்ட தன் இனத்தைச் சார்ந்தவர்கள் சிலர் ஊர்ப்பொதுக்கூட்டத்தில் தவறு செய்யாத உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களிடம் ‘குற்றக் காணிக்கை அளிக்க வேண்டும்; இல்லையெனில் ஊரை விட்டுவெளியேற வேண்டும்’ என்று தவறான தீர்ப்புக் கூறியதை ஏற்காது எதிர்த்தவர் பிச்சாண்டக்கவுண்டர். இதை “ஊர்க்கவுண்டர் சொல்லி முடித்தாரோ இல்லியோ பிச்சாண்டக்கவுண்டர், ‘’டேய்! எந்தக் கொம்பண்டா இவனுககிட்ட ஒன்னேகால் ரூபா குத்தம் வசூலிக்கிறவன்? குத்தமா குத்தம்! குத்தமுங் கட்டமுடியாது! ஊரைவிட்டுப் போகவும் முடியாது! எவன் வந்து என்னென்ன புடுங்குவானோ புடுங்குங்கடா பாக்கலா?’ என்று நீட்டி முழக்கினார். ஊர்க்கூட்டம் கலைந்து விட்டதாக அறிவித்தார்கள். யாரும் அங்கே நிற்கவில்லை. பிறகு யாரும் யாரிடமும் குத்தம் வசூலிக்க முடியவில்லை. “(அத். 13, ப. 128) என்ற புதின வரிகள் மூலம் அறியமுடிகின்றது. தன் சாதியினராய் இருந்தாலும் அநீதிக்குத் துணைபோகாமல் நியாயத்திற்காக தாழ்ந்த சாதியினருக்கு துணைநின்ற இவரது மாண்பு உயர்வானது.

“தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்”
(திருக்குறள். 114)

என்பது வள்ளவப் பெருந்தகையின் வாக்கு. அதாவது, ஒரு மனிதன் நடுவுநிலைமை உடையவனாக இருந்தானா? இல்லையா? என்பது அவனது இறப்பிற்குப்பின் எஞ்சிநிற்கும் புகழாலும் பழியாலும் அறியமுடியும் என இக்குறட்பா உரைக்கின்றது. ஆராய்ந்து பார்த்தால் வாழ்வியல் உண்மை இதுவே ஆகும். இவ்வகையில் வள்ளுவர் கூறும் ‘தக்கார்’ எனும் மாண்பமைந்த பண்பினராக விளங்கியவர் பிச்சாண்டக்கவுண்டர்.

மாப்பிள்ளை நாயக்கர் தோட்டத்தில் பிச்சாண்டக்கவுண்டரின் மனைவியும் மருமகளும் இவர்களது மாட்டிற்குப் புல் பிடுங்கிக் கொண்டு வந்ததை மறுநாள் அவரிடமே சென்று சொல்லிவிடுகிறார் பிச்சாண்டக்கவுண்டர். புல்லை, தன்னுடைய மாட்டுக்குத் தான் பிடுங்கிக் கொண்டு வந்து போட்டார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் நியாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அவரின் பண்பாடு எண்ணத்தக்கது. தன்னுடைய மாடு அடுத்தவர் பொளியில் மேய்ந்தாலும் அதன் வாயைப் பிடித்துத் தள்ளி விடுகிற நடுநிலை உணர்வு கொண்டவர் இவர். தன்னுடைய சுயநலத்துக்காகக் கூட அடுத்தவன் பொருளைச் சுரண்டக்கூடாது என்பது வேளாண்தொழில் செய்யும் பிச்சாண்டக்கவுண்டரின் எண்ணம் ஆகும். இதனை மாப்பிள்ளை நாயக்கர், பிச்சாண்டக்கவுண்டரின் இறப்பிற்கு வந்தபோது பிச்சாண்டக்கவுண்டரின் பேரன் ராசுவிடம் கூறுவதாக, “‘இதுக்குள்ளே ஒவ்வொரு செமை பில்லு கொத்திப் போட்டீங்களா’ன்னு கேட்டிருக்குது பெரியகவுண்டரு.



Scanned with OKEN Scanner

உங்க அம்மா எதார்த்தமா 'நம்ம காட்டுக்கோள ஏதுங்க பில்லு? மாப்பிள்ளை நாயக்கரு காட்டுக்கோள இருந்து, கோரை கீரை, முறிஞ்ச பூட்டைப் பயிருங்கியிருமா அதையும் இதையும் ஒட்ட வெச்சு ஆளுக்கொரு தலைச் செமைக்குக் கொண்டு வந்து போட்டிருக்கிறோம்'னு சொல்லிச்சு.

அதைக் கேட்டுதோ இல்லியோ, அய்யன் அவிகளுக்கு வந்ததுபாரு கோபம், மம்மாணியா வந்துட்டுது, வாரியிலே அப்பிடியே எருத்தை. உட்டுப் போட்டு சாட்டை வாரைத் தூக்கீட்டு அடிக்கறதுக்கு ஓடியாந்தது. " (அத். 17, ப. 176) என்று கூறியதான புதின வரிகள் தெரிவிக்கின்றன. "ராசுவிடம் தொடர்ந்து கெங்க நாயக்கர் "மறுபடி என்ன ஆச்சு தெரியுமா? ரண்டு நாக் கழிச்சு மாப்பிள்ளை நாயக்கர், வெடியாலே தோட்டம் சுத்திப் பாக்கிறதுக்கு வந்தாங்க. அவிக கிட்டம் அப்பாரு அய்யன் வந்து இதப்பாருங்க எனக்குத் தெரியாம எங்க மருமகளும் முந்தா நேந்து உங்க சோளக்காட்டுக்கோள வந்து கெழகோட்டிலேயே ஒரு அணப்புக்கு முதிச்சு பில்லுப் புடுங்கியிட்டு வந்திட்டாங்க. அதனாலே எங்க ஊட்டுக்கோள பெரிய சண்டையே வந்திட்டுதுங்க இனி நீங்க ஒரு ஆளை இங்கே காவலுக்கு வெச்சுக்கிறது நல்லதுன்னு சொல்லிப் போட்டனுங்க. " (அத். 17. ப. 178) என்று கூறிய மேற்கண்ட புதினவரிகளால், தன் குடும்பத்தினரே ஆயினும் பிறரது பொருளை எடுத்துக் கொண்டு வந்தால் அதனை ஏற்றுக்கொள்ளாது எதிர்க்கும் பண்பும் அத்தவறை உரியவரிடம் மறைக்காமல் கூறும் நடுநிலைப் பண்பும் பிச்சாண்டக்கவுண்டரிடம் மேலோங்கி இருந்ததை அறியமுடிகின்றது.

### நேர்மை

நேர்மையைத் தன் வாழ்வின் உயிர் மூச்சாகக் கொண்டு வாழும் மனிதராக பிச்சாண்டக்கவுண்டர் விளங்குகிறார். நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பிச்சாண்டக்கவுண்டர் மீது பொய்யான குற்றச்சாட்டினைக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கின்றார். பிச்சாண்டக்கவுண்டர் தன்னுடைய பூமியை நாயக்கரிடம் ரூபாய் 500க்கு அடமானம் வைத்ததை, நாயக்கர் பிச்சாண்டக்கவுண்டர் தன்னிடம் ரூபாய் 3, 000 பெற்று விட்டதாகக் கூறியதே அந்தப்பொய்வழக்கு. இந்த வழக்கு விபரத்தை நீதிபதி நீதிமன்றத்தில் படித்துக்காட்ட, அதுகேட்ட பிச்சாண்டக்கவுண்டர் நாயக்கரை அந்த இடத்திலேயே போட்டு அடித்துவிட்டதை பிச்சாண்டக்கவுண்டரே கூறுவதாக அமையும் புதினவரிகள் பின்வருமாறு அமைகின்றன.

"என்கிட்ட வாசிச்சுக்காட்டி ரேகை வாங்கினது ஒன்னு, கோர்ட்டுலே வாசிக்கறது வேறையான்னு! எனக்குக் கோவம் வந்தது பாரு! அங்கே எனக்கு பின்னான்ட நாயக்கன் வக்கீலுக்குப் பக்கத்திலேயே குச்சிட்டு இருந்தான் பாரு! அப்படியே தூக்கிக் குப்புறப் போட்டு மேலே ஏறிக்குச்சிட்டு செருப்பிலியே அடிச்சேன். போலீஸ்காரர் வந்து வெலக்கி உட்டாங்க, அப்புறம் சர்ச்சி என்னைக் கேட்டுது, கத்தியிருந்தா குத்தியிருப்பாயா கவுண்டரேன்னு கேட்டுது. ஆமாங், குத்தியிருப்பேன். நேர்மையா வந்து எதார்த்தமா என்னையத் தோட்டத்தைக் கேட்டிருந்தாப் பூராமையும் வேணும்னாலும் எழுதிக் குடுத்திருவேன். ஏமாத்தி எழுதி வாங்கினா அது எதுவா இருந்தாலும் உடமாட்டேனுங்கன்னு சொன்னம் பாரு! அங்க இருந்த கூட்டமே விக்கினது விக்கினாப்பிலே ஆகிட்டது. அப்புறம் நாயக்கரைப் பார்த்து சர்ச்சி 'நாயக்கரே கவுண்டர் சொல்றதுதான் நம்பறாப்பலே இருக்குது. கவுண்டருக்கு ஒரு பத்து ஏக்கராவை உட்டுப்போட்டு பாக்கிய வேணும்னாக்கா நீங்க சாசீனம் பண்ணிக்க நானே வாரேன் உங்க ஊருக்கு பேசி முடிச்சுக்கலாம்... கவுண்டர் உன்னை இங்கே அடிச்சிட்டார்னு பழி வாங்கிடலாம்னு ஏதாச்சும் செஞ்சிடாதே' என்று சொல்லிப் பாராவுக்கு ரண்டு போலீசை அனுப்புச்சு வெச்சாங்க பாரு" (அத். 14, ப. 143) என்று பிச்சாண்டக் கவுண்டர் கூறுவதாக இடம்பெற்றுள்ள இப்புதினவரிகள் பிச்சாண்டக்கவுண்டர் நேர்மைக்கு இலக்கணமாக வாழ்ந்தவரென்பதையும் அந்த நேர்மைக்குக் களங்கம் நேர்கிறபோது இடம், சூழல் என்பதைப் பற்றிய கவலை ஏதுமின்றி வெகுண்டு எழுந்து



Scanned with OKEN Scanner

நீதியை நிலைநாட்டக் கொலை செய்யக்கூடத் துணிகின்ற மனோபாவத்தைக் கொண்டவரென்பதையும் தன்னை ஏமாற்ற நினைக்காமல் நேரிடையாகத் தனக்கு இன்னது வேண்டுமெனக் கேட்டால் தனக்குக் கூட வைத்துக்கொள்ளாமல் கொடுத்து விடுகின்ற மனோபாவம் கொண்டவரென்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. தான் ஒருவரால் ஏமாற்றப்படுவதையும் பொய்க்குற்றத்திற்கு ஆளாக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாத பண்பினராகவும் தாராளமனப்பான்மையினராகவும் பிச்சாண்டக்கவுண்டர் விளங்குவதை இங்குக் காணமுடிகின்றது. தன் உயிரோடு உடம்போடு ஒட்டிக்கலந்த 'மண்' என்ற உணர்வு, அதை ஏமாற்றிப் பறித்தால் விவசாயிகளால் ஏற்றுக்கொண்டு சும்மா இருக்கமுடியாது என்ற மாண்பு இவர் வழி வெளிப்படுகின்றது.

### உதவி செய்யும் மனப்பான்மை

பிச்சாண்டக்கவுண்டரின் இறப்புக்கு வந்திருந்த மாப்பிள்ளைநாயக்கர் பிச்சாண்டக்கவுண்டரைப் பற்றி ராசுவிடம் கூறும்போதும் அவரின் பண்புகள் வெளிப்படுவதை பின்வரும் வரிகளில் காணமுடிகின்றது. "உண்மையான மனுஷன் அப்புனு! யதார்த்தமான மனுஷன். ஒரே போக்கு! சூதுவாது சூழ்ச்சியெல்லாந் தெரியாது. பிரியமா இருப்பாங்க... எங்க கண்ணான் எங்க கண்ணான்னு எப்பப்பாரு உம் பேச்சாத்தான் இருக்கும்! எனக்கு அந்தக் காலத்துலேயே பெரிய ஆதரவு கொடுத்த மனுசன். உங்க அப்பாரு மட்டும் இல்லீன்னு வெச்சுக்க. நான் எங்க மாமியா சொத்தைப் பூராம் அடிமாட்டு வெலைக்கு வித்துப்போட்டு போயிருக்க வேண்டிதாயிருக்கும். " (அத். 16. ப. 165) என்று மாப்பிள்ளை நாயக்கர் பிச்சாண்டக்கவுண்டரைப் பற்றிக் கூறும் வரிகளிலிருந்து அவருடைய உதவி செய்யும் மனப்பான்மையை அறிந்துகொள்ளமுடிகின்றது.

மாப்பிள்ளை நாயக்கர் பிச்சாண்டக்கவுண்டர் தன் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தவர் என்ற தன்மையைக் கூறக்கேட்ட ராசு, "அப்பாரு அய்யன் ஒரு வரலாறு. அந்த வரலாற்றுத்தொடர் சங்கிலிகளில் மாப்பிள்ளை நாயக்கர் ஒரு முக்கியமான சங்கிலிதானா?" (அத். 16. ப. 166) என்று தனக்குள் கேட்டுக் கொள்வதாக வருகின்ற வாயிலாக வரிகள் பிச்சாண்டக் கவுண்டரின் மாண்பினை அறியமுடிகின்றது.

### உழைப்பைப் போற்றலும் மான உணர்வும்

"உழைப்பே உயர்வுதரும்; உண்மையும் நேர்மையும் ஒருவரை உயர்நிலையாக்கும்;" என்ற தொடர்களுக்குச் சான்றான குணம் கொண்டவர் பிச்சாண்டக்கவுண்டர். "அவனவனது அவனவனுக்குன்னு இருந்தாப்போதும், பாடுபடறவன் வாங்குற கூலிக்கு வஞ்சகமில்லாமல் பாடுபடோனும் என்பது அய்யனுக்குள் ஊறின் மனசு" (அத். 17, ப. 174)" அய்யன் கண்ணு மின்னாண்டெ ஆருமே இன்னொருத்தரோட பொருளைத் திருடப்படாது! ஒத்துக்க மாட்டாங்க! ஆனா அவிககிட்டப்போய் இது எங்களுக்கு வேணுமுங்கன்னு தோதாப்பேசிக் கேட்டாப் போதும். அது தொண்டையில் போறதா இருந்தாலும் தோண்டிக் குடுத்துருவாங்க" (அத். 17, ப. 178) ஒருவன் உழைப்பில் எந்த வஞ்சமும் செய்யாமல் உழைக்க வேண்டுமென்பதிலும் உழைப்பவனுக்கு உரிய கூலியை வழங்க வேண்டுமென்பதிலும் விவசாய பூமியில் குறைபாடு இன்றி நன்றாக உழைக்க வேண்டும் என்பதிலும் பிறர்பொருளைத் தான் மட்டுமல்ல மற்றவர்களும் திருடக்கூடாது என்பதிலும் உறுதியோடு விளங்கிய மாண்பான மனிதர் பிச்சாண்டக்கவுண்டர் என்பதை மாப்பிள்ளை நாயக்கர் வாயிலாக வரும் மேற்கண்ட புதினவரிகள் கொண்டு அறியமுடிகின்றது.

### சமத்துவ உணர்வு

நண்பர்கள் பற்றி,

"மருவுக மாசற்றார் கேண்மை ...
..................... (திருக்குறள். 800)

என்ற 'குறட்பாவரியானது குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ளவேண்டும்' எனச் சுட்டுகின்றது. இதற்கிணங்க பிச்சாண்டக்கவுண்டரின் நட்பும் அமைந்திருந்ததை,



Scanned with OKEN Scanner

"மந்திரி மாதாரிக்குத் தெரியாத பிச்சாண்டக்கவுண்டர் ரகசியமே எதுவும் இருக்காது. மந்திரியும், பிச்சாண்டக்கவுண்டரும் ஏறத்தாழ ஒத்த வயதினர். மந்திரி குடும்பத்தில் ஒரு நிகழ்ச்சி என்றால் பிச்சாண்டக்கவுண்டர் குடும்பத்தில் அந்த நிகழ்ச்சி நடப்பது போலவே இந்தத் தலைக்கட்டுப் பூராவும் கடந்தாச்சு" (அத். 3, ப. 13) என்ற புதின வரிகளால் சாதி பேதமின்றி சமத்துவ உணர்வுடன் நட்புக் கொண்டிருந்தவர் பிச்சாண்டக்கவுண்டர் என்பதை அறியமுடிகின்றது.

மந்திரி மாதாரியிடம் மட்டுமின்றி, ஊரில் உள்ள மற்ற அனைவரிடமும் இதேபோல் பழகும் இயல்புடையவர் பிச்சாண்டக்கவுண்டர் என்பதை, "அவர் தானே அந்த ஊர்த் தோட்டிகளுக்கு எல்லாம் பாதுகாப்பாக இருந்தவர் என்பது தான் அய்யனுடைய தனித்தன்மை. அதை நினைத்து, நெஞ்சு நெகிழ்ந்து ராசுவின் அப்பாவிடம் அழுது துயரத்தைப் பகிர்ந்து கொண்டனர். " (அத். 13, ப. 12) என்ற பிச்சாண்டக்கவுண்டரின் இறப்பிற்கு வந்திருந்தபோது தோட்டிகள் செய்ததைச் சுட்டும் புதினவரிகளால் தெரிகிறது. இதன் வாயிலாக சாதி பேதம் பார்க்காத சமத்துவ எண்ணம் கொண்ட மாண்பாளர் பிச்சாண்டக்கவுண்டர் என்பதை அறியமுடிகிறது.

**உறவுகளைப் பேணுதல்**

கொங்கு மக்களின் இயல்பே அனைவரிடமும் அன்பு செலுத்துதலே ஆகும். இவர்களில் பெரும்பான்மையோர் மனிதர்களிடம் அன்பு காட்டுவதைப் போலவே தாம் வளர்க்கும் ஆடு, மாடுகளிடமும், கோழி, நாய் போன்றவைகளிடமும் பாசம் வைத்திருப்பவர்கள்.

"நேசிப்பு... நேசிப்பு
புருசனைப் போலவே
பண்ணையத்தையும்
குழந்தைகளைப் போலவே
எருமைகளையும்!
உறவுகளைப் போலவே
அக்கம் பக்கத்தையும்" (சிற்பி, ஒரு கிராமத்து நதி, ப. 28)

என்ற கொங்குநாட்டுக்கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் அவர்களின் பதிவு ஒன்றே கொங்கு வேளாண் மக்களின் பண்பை விளக்கப் போதுமான சான்றாகும். பிச்சாண்டக்கவுண்டரும் இதற்கு விதிவிலக்கானவர் அல்ல என்பதைப் புதினத்தில் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார் படைப்பாளி. பிச்சாண்டக் கவுண்டருக்கு உறவுகளில் தன் மகன் வழிப் பேரன் ராசுவின் மீது தான் மிகுந்த பாசம். இதனைப் பல்வேறு கதைமாந்தர்களின் கூற்றுகளாக புதினம் நெடுகிலும் குறிப்பிட்டுள்ளார்.

வேலுச்சாமிக்கவுண்டர் என்ற கதாபாத்திரம், பிச்சாண்டக்கவுண்டரின் இறப்பிற்குச் செல்வதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்த போது குப்புச்சாமி என்பவரிடம் கூறுவதாக வரும் புதினவரிகள் இங்கு நினைவு கூறத்தக்கன. அதாவது, "பேரன் ... வந்து ஒரு வாய் பால் ஊத்தினானாமா ... அப்படியே கடக்குனு ஒரு சத்தம் வந்ததாமா ... அவனைப் பார்த்த மேனிக்கே உசிரை உட்டுட்டுதாமா ..." என்று கூறி முடித்தார். குப்புசாமி ...1 "ச்சே ... பேரன்னா உயிரையே உட்டுருவாங்கன்னு சொல்லுவாங்களே .... காட்டுக்கார அய்யன் தான் பேரனைப் பாத்துட்டே உசிரை உட்டிருக்குது... அந்த அய்யன் சத்தியமானுங்கா... வெள்ளைச் சோளம்" (அத். 8. ப. 54) என்ற கூற்று இதனை தெரிவிக்கின்றது.

முன் கோபக்காரராக இருந்தாலும், மிகுந்த அன்பும் குழந்தைக்குணமும் கொண்டவர். தன் மனைவியின் மீது மிகுந்த பாசம் உடையவர். இதனைத் தன் பேரன் ராசுவிடம் கூறுவதாக, "உங்க அப்பத்தா இருக்கிறாளே! மகராசி தெரியுமா!" (அத். 2, ப. 11) என்ற புதினவரியால் அறியமுடிகின்றது. ஆண், பெண் என்ற பேதமின்றி, மனைவி தனக்குக் கீழானவள் என்பனபோன்ற அடிமை எண்ணமும் இல்லாதவர். தன்முன்கோபம் பற்றித் தன் மனைவி பலமுறை தன்னைத் திட்டினாலும் அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாதவர் என்பதை, "இந்த மனுஷனுக்கு நான்னாங் காட்டிச் சட்டி வெச்சு இது நாள் வரைக்கும் சோறாக்கிப் போட்டேன். வேறெ



Scanned with OKEN Scanner

ஒருத்தியா இருந்திருந்தா எப்பவோ மண்ணவாரித் தூத்திகிட்டுப் போயிருப்பாள்” என்று சொல்லிவிட்டு வேகமாக வந்து பிச்சாண்டக்கவுண்டரின் கன்னத்தின் இடது பக்கம், தன் வலது கை ஆள் காட்டி விரலை உட்புறம் மடக்கி வெளியே தெரியும் முழியின் மீது பெருவிரலைப் பதித்து இடித்துச் சென்றாள். ராசுவுக்கு ஒரே சிரிப்பு. பிச்சாண்டக் கவுண்டருக்கும் ஆனந்தமான பெருஞ்சிரிப்பு” (அத். 2, ப. 11) என்ற செய்தியைக் கொண்டு பிச்சாண்டக் கவுண்டரின் உறவுகளுக்கு மதிப்பளிக்கும் மாண்பு வெளிப்படுகின்றது.

தான் வாழும் போது மட்டுமமின்றி, தான் இறக்கும் தருவாயில் கூட ‘தன்னைச் சுற்றித் தன் உறவுகள் இருக்க வேண்டும்’ என்ற எண்ணம் கொண்டவர் பிச்சாண்டக்கவுண்டர். இதனை ஒருமுறை தன் பேரன் ராசுவுடன் பேசிக்கொண்டிருக்கும்போது கூறியுள்ளார். இதை, “ராசு தன் அப்பாரு இறக்கும்போது ‘எல்லாரும் தம் பக்கத்தாலே இருக்கனும்” என்று தான் விரும்பியதை ஒரு நாள் சாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது அவனிடம் அவர் கூறியது அவனுக்கு மனதுக்குள் இப்போது நிழலாட்டம் ஓடுகிறது. (அத், 2, ப. 11) என்ற வரிகளானது

## தொகுப்புரை

“ஊர் கலைஞ்சு போச்சு” என்ற புதினத்தில் இடம்பெற்றுள்ள முதன்மைக் கதாபாத்திரமான “பிச்சாண்டக்கவுண்டர்’ என்பவரிடம் உள்ள மாண்புகளைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. கட்டுரையின் தொடக்கத்தில் ‘முன்னுரை’ இடம்பெற்றுள்ளது. அதை அடுத்து ‘மாண்பு’ பற்றிய சொற்பொருள் விளக்கங்கள் அகராதியிலிருந்தும் பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பிச்சாண்டக்கவுண்டர் அறிமுகம் என்ற தலைப்பின் கீழ் பிச்சாண்டக்கவுண்டரிடம் உள்ள பண்புகள், பழக்கவழக்கங்கள் பற்றிய சுருக்கமான செய்திகள் இடம்பெறுகின்றன. மேற்கோள்களாகப் பயன்படுத்தப்பட்ட நூல்கள் பற்றிய விவரங்கள் அந்தந்தப் பக்கங்களில் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து முடிவுரை உள்ளது. நிறைவாகத் தொகுப்புரை இடம்பெற்றுள்ளது.

## முடிவுரை

இவ்வாய்வின் வழி பின்வரும் ஆய்வுமுடிகள் கிடைக்கின்றன.

கொங்குக் கிராமங்களில் வாழ்ந்த சென்ற தலைமுறை மக்களின் பிரதிநிதியாக மட்டுமின்றி மாந்தர்களிடம் இருக்கவேண்டிய மாண்புகளையும் கொண்டவராகப் பிச்சாண்டக்கவுண்டர் படைக்கப்பட்டுள்ளார். படைப்பாளர், கொங்கு மக்களிடம் இருக்க வேண்டிய அடிப்படையான குணங்கான, தங்கள் குலத்தொழிலில் பற்றுடன் இருத்தல்; பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பேணுதல்; சுய ஒழுக்கம் உடையவர்களாக இருத்தல்; சமுதாயத்தில் அனைவரையும் சமமாகப் பார்க்கும் இயல்பை வளர்த்துக் கொள்ளல்; எத்தகைய இன்னல் வந்தபோதும் உண்மையுடனும் நடுவுநிலைமையுடனும் இருத்தல்; தாம் வாழும் மண் மீதும் தான் சார்ந்திருக்கும் இயற்கை மீதும் மதிப்புடையவர்களாகவும் அவற்றைப் பேணுபவர்களாகவும் இருத்தல் போன்ற பலரின் நற்குணங்களைப் பிச்சாண்டக்கவுண்டர் என்ற ஒரு கதாபாத்திரத்தின் இயல்புகளாக மாற்றி வடிவமைத்துள்ளார். இத்தகைய மேன்மைக் குணங்களைப் பின்பற்றி மாண்புள்ள மாந்தர்களாக வாழ முயற்சிப்பதே இக்கட்டுரையின் வழி பெறப்படும் பயனாகும்.

## பயன்பட்ட நூல்கள்

1. நடராசன் மா.- ஊர் கலைஞ்சு போச்சு
2. பரிமேலழகர் உரை - திருக்குறள்
3. செல்வக்குமார் சு. முனைவர் - கொங்குப் புதினங்களில் பண்பாட்டுப் பதிவுகள்
4. லிப்கோ தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி.

ஐ



Scanned with OKEN Scanner